20th March 1963]

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: சர்க்காரில் சவுக்குப் பயிர் செய்வதற்கு அதிகம் செலவாகிறது. கண்காணிப்பு கஷ்டமாக இருக்கிறது ஆகவே, தனிப்பட்டவர்களிடத்தில் சவுக்குப் பயிரிடுவதை ஒப்படைத்தால், நல்லவிதமாக அவர்கள் பயிர் செய்வதற்கு ஏதுவாக இருக்கும் அல்லவா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார்: சர்க்கார் சவுக்கு வைப்பதற்கு அதிகச் செலவு ஆகிறது என்று சொல்லுவதற்கில்லை. ஒரு ஏகரா வுக்கு ரூ. 90 லிருந்து ரூ. 100 வரை செலவு ஆகிக்கொண்டிருக்கிறது. ஏகராவுக்கு 3,000 முதல் 5,000 நாற்றுக்கள் வரை நாங்கள் வைத்துக் கொண்டிருக்கிறோம்.

Bus-stand (Tiruvannamalai)

* 299 *Q.*—SRI A. ARUMUGAM: SRI C. KOTHANDARAMA BAGAVATHAR: } Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state whether there is a proposal to construct a common bus-stand for Tiruvannamalai Municipal Town?

THE HON. SRI S. M. A. MAJEED: A proposal to construct a central bus stand is under the consideration of the Tiruvannamalai Municipal Council.

ஒரு மத்திய பஸ் நிலையம் அமைக்கும் திட்டம் திருவண்ணாமலை நகராட்சியின் பரிசீலனையிலே இருந்து வருகிறது.

திரு. ஏ. ஆறுமுகம்: எப்பொழுது வேலை ஆரம்பமாகும் ரூபாயில், எந்த இடத்தில் நடைபெற இருக்கிறது, என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

கனம் திரு. சே. மா. அ. மஜீத்: எவ்வளவு ரூபாயில் என்பது பற்றி என்னிடம் இப்பொழுது தகவல் இல்லை. ஏற்கனவே உள்ள வண்டி நிலையத்தில் பஸ் நிலையம் கட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டு, அதற்கு R.T.O, அனுமதி வழங்கினர். இதற்கிடையில் அந்த இடத்தை மாற்ற வேண்டும் என்று பஸ் சொந்தக்காரர்கள் உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்த தால், அந்த வேலை அப்படியே நின்றுவிட்டது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை: பஸ் போக்குவரத்து அதிகமாக இருப்பதின் காரணத்தினால், அநேகமாக பஞ்சாயத்துகளிலெல்லாம் பஸ் நிலையம் கட்டவேண்டியிருக்கிறது. அவ்வாறு கட்டுவதற்கு எஸ்டிமேட் தயார் செய்வது, ஆர், டி. ஒ.-விடமிருந்து அனுமதி வாங்குவது, இது போன்ற காரணங்களினால் தாமதம் ஏற்பட்டு, பஞ்சாயத்து போர்டுக்கு வருவாய் குறைந்து விடுகிறது. ஆகவே, இது சம்பந்தமாக டைப் டிஸைன் பிளான் கொடுத்து எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் அரசாங்கம் உதவுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: தனிக் கேள்வி வேண்டும். கனம் தலைமை அமைச்சருக்குப் போடவேண்டிய கேள்வியும்கூட அது.

வேலை தேடிக்கொடுக்கும் ஸ்தாபனங்கள்

* 300 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி:** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-62-ல் இராமநாதபுர மாவட்டத்திலிருந்து வேலை தேடிக் கொடுப்போர் அலுவலகத்தில் வேலைக்குப் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) இதில் ஹரிஜனங்கள் எத்தனை பேர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) 12,054 (1—4—61-லிருந்து 31—3—62 வரை).

(இ) 961 பேர்கள் ஷெடியூல் ஜாதியார் கூட்டத்தார்.

திரு. எஸ். மாதவன் : இதில் எத்தனை பேர்களுக்கு வேலை வாங்கித் தந்திருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

கனம் திரு. எம் பக்தவத்சலம் : அந்த எண்ணிக்கையை நான் இப்பொழுது கொடுத்தேன், 961 பேர்கள் என்று சொன்னேன்.

* 301 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் வேலைக்காக 1962–63-ம் ஆண்டில் வேலை தேடும் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட வர்களின் எண்ணிக்கை எத்தனை ?

(இ) மாவட்ட வாரியாக எத்தனை நபர்களுக்கு வேலை கொடுக்கப் பட்டுள்ளன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) 227,401 (1—4—62-லிருந்து 31—1—63 வரை).

(இ) 1—4—62-லிருந்து 31—1—63 வரை மாவட்ட வாரியாக வேலையில் அமர்த்தப்பட்டவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட் டுள்ளது. முன்பு கனம் அங்கத்திளர் திரு. எஸ். மாதவன் கேட்ட கேள்விக்கு இப்பொழுதுதான் விடை அளிக்கப்படுகிறது.

கோயம்புத்தூர்	2,861
தென் ஆற்காடு	3,530
கன்னியாகுமரி	1,823
சென்னை	6,218
மதுரை	3,444
நீலகிரி	2,074
இராமநாதபுரம்	1,822
செங்கற்பட்டு	2,735
சேலம்	3,941
தஞ்சாவூர்	2,534
திருச்சிராப்பள்ளி	2,923
திருநெல்வேலி	2,289
வட ஆற்காடு	2,831
மொத்தம்	39,025

திரு. பி. முருகையன் : அப்படி பதிவு செய்துகொண்ட ஹரிஜனங்களில் எத்தனை பேர்களுக்கு இதுவரையில் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுபற்றி தனியாகக் கணக்கு இப்பொழுது என்னிடம் இல்லை.

திரு. து. ப. அழகமுத்து : தாங்களாகவே வேலை தேடிக்கொண்டவர் களுக்கு நம்பர் கொடுத்து எண்ணிக்கையும் இதில் அடங்கி யிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ்சில் வேலை சிருஷ்டி செய்து கொடுத்தோம் என்று பெருமை பேசிக்கொள்ள வில்லை. எம்ப்ளாய்மெண்டு எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்துகொண்டவர்களில் எத்தனை பேர்களுக்கு வேலை கிடைத்தது என்பது பற்றித்தான் சொன் னேன். அப்படிச் சொன்னால் கனம் அங்கத்தினர் திருப்தி அடைவார்கள் என்றால், நான் அப்படிச் சொல்லுகிறேன்.